**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

| | | | |
|---|---|---|---|
| 2024-ம் ஆண்டு மார்ச் மாதம் 5-ம் நாள் செவ்வாய்கிழமை பிரதிவாதி தரப்பு 3-ம் சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண் 44வது பிரிவு 6(1)ன் பிரிவின்படி உதவியாளர் திரு.சுவர்ணரத்தினக்குமார் என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
| பெயர்: | அங்குநாதன் | தொழில் : | |
| த.பெ: | | சமயம் : | |
| கிராமம்: | | சாதி : | |
| வட்டம்: | | வயது: | |

**5.3.2024 OS No. 109/2019 பி.வா.சா.3** அங்குநாதன் **ஆஜர்**

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை:**

1. எனக்கு சொந்த ஊர் அய்யம்பேட்டை வேலாங்குளம் என்றால் சரிதான். தாவா சொத்திலிருந்து என் ஊர் இரண்டு கிலோ மீட்டர் இருக்குமா என்றால் 1 ½ கி.மீ இருக்கும். நான் தாக்கல் செய்துள்ள நிருபணவாக்குமூலத்தில் எனது சொந்த ஊர் என்னவாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் வேலாங்குளம் என்று தாக்கல் செய்துள்ளேன். எனது சொந்த ஊர் அய்யம்பேட்டை வேலாங்குளம் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். 1-ம் பிரதிவாதி முருகனின் சகோதரியை நான் திருமணம் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

2.எனது சகோதரியை முருகன் திருமணம் செய்துள்ளார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிருபணவாக்குமூலத்திற்கு யார் விபரம் சொன்னது என்றால் முருகன் சொல்லிதான் தெரியும், இடத்தின் விபரமும் தெரியும். என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் மாசாணம் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார். மாசாணம் தாக்கல் செய்த பொய் வழக்கிற்குதான் நான் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான். வேறு என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் சொத்து அவருடையது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை.

3. என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார், என்ன சர்வே எண்ணிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றாலும், முருகனின் சகோதரியை திருணம் செய்துள்ளதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னை சாட்சி சொல்ல 1-ம் பிரதிவாதி முருகன்தான் அழைத்து வந்தார் என்றால் சரிதான்.

**(மறு விசாரணை இல்லை)**

Taken down by me in open court readover/ interpreted to the witness in Tamil and acknowledged by him/ her to be correct

District Munsif Cum Judicial Magistrate, Thiruppuvanam.